தினமணி

தென்மேற்குப் பருவமழை 22% குறைவு: தமிழகத்தில் குறுவை சாகுபடி பாதிப்பு

- ஜெ.எம். ருத்ரன் பராசு -

First Published : 24 Jul 2012 03:46:38 AM IST



காரைக்கால் அம்மையார் குளக்கரையில் கருட சேவையில் ஒருசேர எழுந்தருளிய உற்சவர்கள்.

சென்னை, ஜூலை 23: இந்தியாவில் இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை வழக்கத்தைவிட 22 சதவீதம் குறைவாக பதிவாகி உள்ளது. இதேபோல தமிழகம் மற்றும் புதுவையில் வழக்கத்தைவிட 17 சதவீதம் குறைவாக உள்ளது. இதனால் தமிழகத்தில் குறுவை சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பெய்யும் மொத்த மழையில் சுமார் 75 சதவீதம் ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்குப் பருவமழையின்போது பெறப்படுகிறது. வேளாண்மை, குடிநீர் தேவைகள் அனைத்தும் இதனை நம்பியே உள்ளது.

சராசரி மழையைக் கணக்கிடும் முறை: ஒரு பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பெய்த மொத்த மழை அளவே சராசரி மழையாகும். இது ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும் மாறக்கூடியது. மழை கூடுதலாக பெய்துள்ளதா அல்லது குறைவாகப் பெய்துள்ளதா என்பது இந்த சராசரி மழையை வைத்தே கணக்கிடப்படுகிறது.

22 சதவீதம் மழை குறைவு: இந்த ஆண்டு நாடு முழுவதும் தென்மேற்குப் பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. ஜூலை 22-ம் தேதி வரை சராசரியாக பெய்யும் மழையைவிட 22 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது. இந்த காலகட்டத்தில் சராசரியாக 366.7 மி.மீ. மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு 286.4 மி.மீ. மழையே பெய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் சராசரி மழையை விட 2 சதவீதம் கூடுதல் மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டு பதிவான மழை 901.2 மி.மீ., சராசரி மழை அளவு 886.9 மி.மீ.

3-வது குறைந்த அளவு மழை: இந்தியாவில் கடந்த 1918-ம் ஆணடு அதிகபட்சமாக 25 சதவீதம் குறைவான மழை பெய்தது. 1972-ம் ஆண்டு 24 சதவீத குறைவான மழையும், 2009-ம் ஆண்டு 22 சதவீதம் குறைவான மழையுமே பெய்துள்ளது. அதன்பிறகு இந்த ஆண்டு 22 சதவீத பற்றாக்குறை உள்ளது.
பொய்த்துவிட்ட பருவமழை: இந்தியாவில் இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்துப் போய்விட்டதாகவே கருதப்படுகிறது. இந்த பருவமழைக் காலம் செப்டம்பர் வரை இருந்தாலும் இனி கூடுதல் மழை பெய்ய வாய்ப்பு குறைவு. அப்படியே நல்ல மழை பெய்தாலும் ஏற்கெனவே ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுகட்டுமா என்பது சந்தேகமே.
இதனால் நாட்டின் பொருளாதாரம், வேளாண்மை ஆகியவை கடுமையாகப் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.
தமிழகம்: தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் பெருமளவில் இருப்பதில்லை என்றாலும், கேரள எல்லையோர மாவட்டங்கள் இதனை நம்பித்தான் உள்ளன. குறிப்பாக மேட்டூர் உள்ளிட்ட முக்கிய அணைகள் தென்மேற்குப் பருவமழை காலத்தில் தண்ணீரின் இருப்பு அதிகரிக்கும். இதன் மூலம் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்படும். ஆனால் இந்த முறை மழை இல்லாததால் மேட்டூர் அணை திறக்கப்படவில்லை. இதனால் குறுவை சாகுபடி கடுமையாக பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## உர மூட்டைகளில் எடை குறைவதை தடுக்க வேண்டும்

First Published : 23 Jul 2012 12:53:26 PM IST


தஞ்சாவூர், ஜூலை 22: விவசாயிகளுக்கு வழங்கப்படும் உர மூட்டைகளில் எடை சரியாக இருக்கும் வகையில், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தஞ்சாவூர் வட்ட நுகர்வோர் விழிப்புணர்வு அறக்கட்டளை கோரிக்கை விடுத்துள்ளது.
இதுகுறித்து அதன் செயலர் வயலூர் வ. முருகானந்தம், மாவட்ட ஆட்சியருக்கு விடுத்துள்ள கோரிக்கை மனு:
தஞ்சை மாவட்டத்தில் தற்போது விவசாயப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விவசாயத்திற்கான உரங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திற்கு வரும் உர மூட்டைகள் பழுதடைந்த சாக்குகளில் உள்ளன. நல்ல உர மூட்டைகளில் சரக்குகள் வந்தாலும், அவற்றைத் தொழிலாளர்கள் ஊக்கைப் பயன்படுத்தி ஏற்றி, இறக்குவதால் சேதாரம் அடைய வாய்ப்புள்ளது.
இதனால், விவசாயிகளுக்கு மூட்டைக்கு 2 கிலோ வீதம் குறைகிறது. எனவே, உர மூட்டைகளை இறக்கும் போது ஊக்குகளை பயன்படுத்தாமல் இறக்க வேண்டும்.

மூட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு விவசாயிகளுக்கு கிடைக்கிறதா என்பதை மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்ய வேண்டும்.

## முல்லைப் பெரியாறு அணையை பராமரிக்க தமிழகத்துக்கு அனுமதி

First Published : 24 Jul 2012 03:28:31 AM IST

Last Updated : 24 Jul 2012 04:49:45 AM IST



புது தில்லி, ஜூலை 23: முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்பு மற்றும் செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள தமிழக அதிகாரிகளுக்கு அனுமதி அளிக்குமாறு கேரள மாநில அரசுக்கு உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை உத்தரவிட்டது.

முல்லைப் பெரியாறு அணையின் ஸ்திரத்தன்மை தொடர்பாக நீதிபதி ஆனந்த் குழு தாக்கல் செய்த 40 ஆய்வு அறிக்கைகளின் நகல்களை தமிழகம், கேரளத்துக்கு அளிக்கவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

முல்லைப் பெரியாறு அணை வழக்கு நீதிபதிகள் டி.கே. ஜெயின், ஆர்.எம். லோதா, தீபக் வர்மா, சந்திரமௌலி பிரசாத் குமார், அனில் ஆர். தவே ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன்பு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழகத்தின் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பாப்டே, ""முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தமிழக அரசுக்கு அனுமதி அளித்துள்ளது.

ஆனால், பராமரிப்புப் பணிகளுக்கு செல்லும் தமிழக அதிகாரிகளுக்கு கேரள அதிகாரிகள் அனுமதி மறுக்கின்றனர். ஆகவே, அணையை உடனடியாகப் பராமரிக்கவும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கும்படி கேரளத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

கேரளம் எதிர்ப்பு: இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கேரள அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் ஹரிஷ் சால்வே, ""முல்லைப் பெரியாறு அணை விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. தமிழக அரசு கோரும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள மத்திய சுற்றுச்சூழல்

அமைச்சகத்திடம் ஒப்புதல் பெற வேண்டும். ஆகையால் அணையில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசை அனுமதிக்கக் கூடாது.

அணை வலுவுடன் இருப்பதாக ஏ.எஸ். ஆனந்த் குழு எந்த அடிப்படையில் பரிந்துரை அளித்தது என்பதை அறிய விரும்புகிறோம். அதனால், அந்த குழு தாக்கல் செய்துள்ள அனைத்து ஆய்வு அறிக்கைகளையும் கேரள அரசுக்கு அளிக்க வேண்டும்" என்று ஹரிஷ் சால்வே வாதிட்டார்.

நீதிபதிகள் உத்தரவு: இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

""முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்பு, சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசை கேரள அரசு அனுமதிக்க வேண்டும். இந்தப் பணிகள் அனைத்தும் மூவர் குழுவின் கண்காணிப்பில் நடைபெறும். அந்த குழுவில் மத்திய நீர் வள ஆணையத்தின் தலைவரால் நியமிக்கப்படும் தலைமைக் கண்காணிப்பாளர் பதவியில் இருக்கும் தனி அதிகாரி ஒருவரும் தமிழகம், கேரளத்தின் சார்பில் தலா ஒரு பொதுப்பணித்துறைப் பொறியாளரும் இடம் பெற வேண்டும். அவர்கள் மேற்பார்வையில் தமிழக அரசு அதிகாரிகள் அணைப்பகுதியில் பாரமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அணையில் இருந்து வெளியே வரும் உபரி நீர், கால்வாயில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சுத்தம் செய்தல், அணையின் வழக்கமான பராமரிப்பு பணிகள், ஓடையை செப்பனிடும் பணிகள் ஆகியவற்றை தமிழக அரசு செய்யலாம்.

மேலும் தமிழக அரசு கோரிய, வல்லக்கடவு பகுதியில் இருந்து முல்லைப் பெரியாறு அணை வரை சாலை அமைப்பது, பேபி அணைக்கு செல்லும் வழியில் உள்ள மரங்களை அகற்றுவது ஆகிய இரண்டு பணிகளை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் ஒப்புதல் பெற்று செய்து கொள்ளலாம்.

நீதிபதி ஆனந்த் குழு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 40 அறிக்கைகளின் நகல்களை தமிழகத்துக்கும் கேரளத்துக்கும் சி.டி. வடிவில் அளிக்க வேண்டும்" என்று நீதிபதிகள் உத்தரவில் குறிப்பிட்டனர். இதைத் தொடர்ந்து இந்த வழக்கின் அடுத்த விசாரணையை ஆகஸ்ட் 31-ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

## வாழ்விடம் செல்ல வழி தேடும் யானைகள்!

-டி.காளியப்பன்-

First Published : 24 Jul 2012 12:24:45 AM IST



அரூர், ஜூலை 23: ஆந்திரத்தில் இருந்து வழி தவறி இப்போது அரூர் தீர்த்தமலைப் பகுதியில் முகாமிட்டுள்ள யானைகள், பொதுமக்களின் இடையூறுகளால் வாழ்விடம் செல்ல வழி தெரியாமல் அலைந்து வருகின்றன.

ஆந்திரத்தில் இருந்து வழி தவறி வந்த இந்த 6 யானைகள் திருவண்ணாமலை, ஆத்தூர், கருமந்துறை, தும்பல், மாமஞ்சி கோட்டப்பட்டி, சித்தேரி, தீர்த்தமலை, அரூர், பொம்மிடி, தொப்பூர் வழியாக ஒகேனக்கல் உள்ளிட்ட வனப் பகுதிகளை கடந்த 2 மாதங்களுக்கும் மேலாகச் சுற்றி வருகின்றன.

சேலம் மாவட்டம், கருமந்துறையில் பயணத்தைத் தொடங்கிய யானைகள் பயணம் மீண்டும் அதே பகுதிக்குத் திரும்பி வந்தன. இந்தப் பயணத்தில் சுமார் 400 கி.மீ. தொலைவு யானைகள் நடந்துள்ளன. ஆந்திரத்தில் இருந்து முதலில் 7 யானைகள் வழி தவறி வந்தன. கருமந்துறைக்கு வந்த போது ஒரு யானை இறந்துவிட்டது. இப்போது அந்தக் கூட்டத்தில் 6 யானைகள் மட்டுமே உள்ளன.

நாள் தோறும் நள்ளிரவு நேரங்களில் இடம்பெயரத் தொடங்கும் இந்த யானைகள், அதிகாலை வரையிலும் ஓரிடத்தில் இருந்து வேறு இடத்துக்குச் செல்கின்றன. பகல் நேரங்களில் நன்றாக ஓய்வு எடுக்கின்றன. பின்னர், மாலை 5 மணிக்கு மேல் வனப் பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் நுழைந்து கரும்பு, நெல், வாழை, சோளம் உள்ளிட்ட பயிர்களை உண்ணுவதுடன் சேதப்படுத்தியும் வருகின்றன.

யாருக்கும் பயப்படுவதில்லை: முதுமலை உள்ளிட்ட அடர்ந்த காடுகளில் வாழும் யானைகள் சிறிய சப்தம் கேட்டாலே ஓடிவிடும் தன்மை கொண்டவை. ஆனால், கிராமப் பகுதிக்கு வந்து செல்லும் இந்த யானைகள் எதற்கும் பயப்படுவதில்லை. தீப்பந்தம், பட்டாசு, வெடிகள், மேள சப்தம் என எந்த சப்தத்துக்கும் அஞ்சுவது கிடையாது. பட்டாசு வீசினால்கூட தும்பிக்கையால் பிடித்து காலால் மிதித்துவிட்டுச் செல்கிறது. இதனால், யானைகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தி வெளியேற்ற முடியாது என்கின்றனர் வனத் துறையினர்.

மீண்டும் தொப்பூர் பயணம்?: ஏற்கெனவே இந்த யானைகள் சேலூர் அம்மாபாளையம் தொடங்கி மண்ணூர், சித்தேரி, கோட்டப்பட்டி, தீர்த்தமலை, பொய்யப்பட்டி, கீழானூர், பொம்மிடி, தொப்பூர்,

ராயக்கோட்டை, ஏற்காடு, மஞ்சுவாடி, வாழப்பாடி வழியாக மீண்டும் புறப்பட்ட இடமான சேலூர் அம்மாபாளையம் வனப் பகுதிக்குச் சென்றன.

இப்போது 2-வது சுற்றாக சேலூர் அம்மாபாளையத்தில் தொடங்கி சிட்லிங், கோட்டப்பட்டி, தீர்த்தமலை வழியாக அதே வழியில் மீண்டும் தொப்பூர், ஏற்காடு மலைக்குச் செல்ல வாய்ப்புள்ளதாக வனத் துறையினர் கருதுகின்றனர்.

பொதுமக்களால் அவதிப்படும் யானைகள்: வழிதவறி வந்த யானைகள் செல்லும் இடங்களில் நாள் தோறும் ஏராளமான பொதுமக்கள் கூடுகின்றனர். யானைகளிடம் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதே வனத் துறை ஊழியர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. வயல்வெயில் யானைகள் சேதம் ஏற்படுத்தினால் விவசாயிகள், கிராம மக்கள் பட்டாசுகள், அதிக சப்தம் எழுப்பும் ஒலிகளை எழுப்புகின்றனர். இதனால், யானைகள் எந்தத் திசையில் செல்வது என்று தெரியாமல் திணறுகின்றன.

யானைகள் வந்த வழியாக ஆந்திரம் செல்ல வேண்டுமெனில் திருவண்ணாமலை மாவட்ட வனப் பகுதிக்குச் செல்ல வேண்டும். இதன் காரணமாக, நரிப்பள்ளி வனப் பகுதி வழியாக திருவண்ணாமலை மாவட்ட எல்லைப் பகுதிகளுக்கு யானைகளை விரட்டும் பணியில் வனத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய 3 தினங்களும் 30-க்கும் மேற்பட்ட வனத் துறையினர் இரவு, பகல் பாராமல் யானைகளை விரட்டப் போராடி வருகின்றனர்.

இழப்பீடுகளை விரைந்து வழங்கக் கோரிக்கை: விவசாயப் பயிர்களை யானைகள் தொடர்ந்து சேதப்படுத்தி வருவதால், வனத் துறையினர் விரைந்து இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயிகளுக்கு உரிய முறையில் இழப்பீடு வழங்கினால்தான் அவர்கள் யானைகளை விரட்டாமல் இருப்பார்கள். அப்போதுதான் யானைகள் அதன் போக்கில் செல்லும் என்று விவசாயிகள் கூறினர். திருவண்ணாமலை மாவட்டம் நோக்கிச் சென்ற யானைகளை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தும்பல், மாமஞ்சி, கரும்மந்துறை கிராம மக்கள் 500-க்கும் மேற்பட்டோர் சேர்ந்து விரட்டியதால்தான் யானைகள் திசை மாறின. எனவே, வனத் துறையினருடன் காவல் துறையும் இணைந்து செயல்பட மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

**விருப்பம் போல இடம்பெயர நடவடிக்கை**

இதுகுறித்து அரூர் மாவட்ட வன அலுவலர் (பொறுப்பு) எம்.செந்தில்குமார் திங்கள்கிழமை கூறியது:

யானைகளைப் பார்க்க வேண்டும் என்பதற்காக மக்கள் கூட்டமாக வருகின்றனர். தங்களது விவசாயப் பயிர்களை சேதப்படுத்திவிடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் கூட்டமாக

வருகின்றனர். யானைகளால் மனித உயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காகவே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில், திங்கள்கிழமை பிற்பகலில் தருமபுரி மாவட்டம், அரூர் தீர்த்தமலைப் பகுதியில் கத்திரிப்பட்டியில் யானைகள் முகாமிட்டிருந்தன. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு வந்த இந்த யானைக் கூட்டம் தீர்த்தமலை வனப் பகுதியில் இருந்து ரெட்டியார் பாளையம் வழியாக திருவண்ணாமலை மாவட்டம் சென்றது. எனவே, யானைகளை விருப்பம் போல இடம் பெயரச் செய்யும் நோக்கில் வனத் துறை செயல்படுகிறது என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**காசிமேட்டில் மீன் விலை கடும் உயர்வு**

ஜூலை 23,2012,09:59



சென்னை : காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில், மீன் விலை, நேற்று கடுமையாக உயர்ந்திருந்தது.காசிமேடு மீன்பிடி துறைமுகத்திற்கு, நேற்று அதிகாலையிலிருந்து, 100 பெரிய படகுகள் மற்றும் 50 சிறிய பைபர் படகுகளில், மீன்கள் பிடித்து வரப்பட்டன. பெரிய படகு உரிமையாளர்கள் நடத்திய ஏல விற்பனையில், காட்டின் கடமான் கிலோ 200 ரூபாய்க்கும், கடமான் ரவுண்டு கூடை 2,000 ரூபாய்க்கும், கடமான் ஊசி (கூடை) 1,800 ரூபாய்க்கும், அதிகபட்சமாக விற்கப்பட்டன. ஏறியது விலை சங்கரா மீன் கூடை 400 ரூபாய், நவரை மீன் கூடை 250 முதல் 300 ரூபாய், கிளிசை மீன் கூடை 150 ரூபாய், பெரிய சங்கரா மீன் கூடை 1,500 ரூபாய், வவ்வால் மீன் கூடை 3,000 ரூபாய் (சிறிய கூடை அளவு), மாவலாசி கிலோ 300 ரூபாய்,

வஞ்சிரம் கிலோ 150 வரை, ஏலத்தில் விற்கப்பட்டன. சில்லரை விற்பனையில், நேற்று முன்தினம், மாவலாசி கிலோ 350, வஞ்சிரம் கிலோ 250 ரூபாய், பெரிய சங்கரா கிலோ 150 ரூபாய், சிறிய சங்கரா 100 ரூபாய், ஆரா கிலோ 200 ரூபாய், பாறை கிலோ 200 ரூபாய், கிளிசை கிலோ 50 ரூபாய், நெத்திலி கிலோ 100 ரூபாய், பொச்சிபாறை கிலோ 150 ரூபாய், வவ்வால் கிலோ 150 ரூபாய், வாளமீன் கிலோ 125 ரூபாய் என்ற விலையில் விற்கப்பட்டன. இந்த மீன்கள் விலை, நேற்று இரண்டு மடங்காக உயர்ந்திருந்தது. மீன் வியாபாரி சித்திரை கூறுகையில், "கடந்த வாரம், புதன் கிழமை அமாவாசை. ஒருநாள் இடைவெளியில், வெள்ளி மற்றும் சனிக்கிழமை தொடர்ச்சியாக வந்தது. இதனால், அசைவப் பிரியர்கள் மீன் வாங்குவதை தவிர்த்தனர். இந்த நாட்களில், மீன் கள் வரத்து இருந்தாலும், உள்ளூரில் விற்பனை அதிகம் இல்லை. இதனால், விலை குறைவாகவே இருந்தது. ஆனால், நேற்று, மீன் வரத்து சராசரியாக இருந்தது. தேவை அதிகரித்ததால், விலை மிக அதிகமாக இருந்தது," என்றார். கூட்டம் அதிகரிப்பு நேற்று, ஆடி முதல் ஞாயிற்றுக் கிழமை என்பதால், சென்னைவாசிகள் அம்மனை வழிபட்டு, வீடுகளில் கூழ் வார்த்தல் நிகழ்ச்சியை நடத்தினர். இந்த நிகழ்ச்சியில், மீன் உணவு முக்கியமாக இடம் பெற்றிருந்தது. இதற்காக, வழக்கத்தை விட, அதிகமாக மீன் தேவை ஏற்பட்டது. இதனால், மீன் விலை உயர்ந்தது. காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில், சில்லரை விலையில் மீன் வாங்க வந்தவர்கள் கூட்டம், அதிகமாக காணப்பட்டது.
சில்லரை விலை விவரம் (ரூபாயில்),மீன் வகை சனி ஞாயிறு,வஞ்சிரம் நடுத்தரம் 250 500,பாறை 200 450,
ஆரா 200 400

**மானாவாரி பருத்தி விதைப்பு தாமதம் : தியாகதுருகம் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2012,00:32 IST

கருத்தை பதிவு செய்ய

தியாகதுருகம் : போதிய மழை பெய்யாததால் மானாவாரி பருத்தி விதைப்பு பணிகளை துவக்க முடியாமல் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
தியாகதுருகம் பகுதியில் ஆண்டுதோறும்
10 ஏக்கர் பரப்பில் மானாவாரியில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. விருகாவூர், முடியனூர், கண்டாச்சிமங்கலம், சித்தலூர், பானையங்கால், கூத்தக்குடி, பொரசக்குறிச்சி, ஈய்யனூர், கொங்கராயபாளையம், வரஞ்சரம் ஆகிய பகுதியில் மானாிவரி பருத்தி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.
இப்பகுதியில் ள்ள களிமண் நிலத்தில் ஆண்டுதோறும் ஜூலை மாதம் தொடங்கி ஆகஸ்ட் மாதம்

முடியும் வரை பருத்தி விதைப்பு பணிகள் தீவிரமாக நடக்கும். அதற்கு முன் பெய்யும் மழை ஈரத்தில் நிலத்தை முது விதைப்புக்கு ஏற்றவகையில் பண்படுத்தி வைத்திருப்பார்கள்.
இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தாமதமானதுடன் இன்னும் எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. கடந்த வாரம் பெய்த மழை ஈரத்தை கொண்டு நிலத்தில் வளர்ந்திருந்த களைகளை அழிக்க அதனை முது விதைப்பு பணிகளை துவக்க தயாராக வைத்துள்ளனர். ஆனால் மழை தொடராததால் மானாவாரி பருத்தி சாகுபடியை துவக்கமுடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். குறித்த பருவத்தில் விதைப்பு பணிகளை முடிக்க முடியுமா என்ற கவலையும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

## துவரை சாகுபடியில் புதிய தொழில் நுட்பம் : அரசு மானியம் வழங்கல்: அதிகாரி தகவல்

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2012,01:14 IST

கருத்தை பதிவு செய்ய

ராசிபுரம்: "துவரை சாகுபடியில், புதிய தொழில் நுட்பமான, நாற்று மூலம் நடவு செய்யும் முறையை பின்பற்றும் விவசாயிகளுக்கு, அரசு மானியம் வழங்குகிறது' என, நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளர்.
அவர் வெளியிட்ட அறிக்கை:
விவசாயிகளுக்கு, துவரை மகசூலை அதிகரிக்கும் நோக்கத்தில், நாற்று மூலம் நடவு செய்யும் நவீன தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, துவரை நாற்றங்கால் அமைத்து செயல் விளக்கத்திடல்கள் அமைத்திட, ஹெக்டேருக்கு, 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.
ஒரு ஹெக்டேருக்கு, 2.5 கிலோ துவரை போதுமானது. துவரை விதைகளை, கால்சியம் குளோரைடு இரண்டு சதவீதம் கரைசலில், ஒரு மணிநேரம் ஊர வைத்து, ஏழு மணி நேரம் நிழலில் உலரவைக்க வேண்டும். அதை தொடர்ந்து, உயிர் உரங்களான ரைரோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவுடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, டிரைக்கோடர்மா விரிடி என்ற எதிர் பூஞ்சான் மருந்து ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் என்ற அளவில் துவரை விதைகளுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு நேர்த்தி செய்த விதைகளை, பாலித்தீன் பையில், ஒரு பைக்கு இரண்டு துவரை விதைகளை மேலாக ஊன்ற வேண்டும்.
முன்னதாக, நான்கு அங்குலத்திற்கு இரண்டு அங்குலம் என்ற அளவில் உள்ள பாலித்தீன் பைகளில், ஒரு பாகம் செம்மண், ஒரு பாகம் மக்கிய சலித்த தொழு உரம் கலந்த கலவையை கொண்டு நிரப்ப வேண்டும். அதில், துவரை விதைகளை ஊன்ற வேண்டும். விதைத்த, 30ம் நாளில்

நடவுக்கு துவரை நாற்று தயாராகிவிடும்.
நடவு செய்த, 25 நாட்களில், துவரை செடியின் நுனியைக் கிள்ளிவிடுவதால், பக்க கிளைகள் அதிகம் ஏற்பட்டு காய்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். விவசாயிகள் சொந்தமாக துவரை நாற்றுகளை தயாரித்து நடவு செய்து கொண்டால், ஒரு ஹெக்டேருக்கு, 50 சதவிதம் மானியமாக, 7,500 ரூபாய் வழங்குவதற்கும் தனியே திட்டம் உள்ளது.
இறவையில் துவரை நாற்று நடவு செய்ய விரும்பும் விவசாயிகள், நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தையோ அல்லது சம்மந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலரையோ அணுகி பயன் பெறலாம்.

## விதைச்சான்று நடைமுறை பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2012,01:14 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: பரமத்தி வேளாண் உதவி இயக்குனர் கூட்ட அரங்கில், விதை உற்பத்தி தொழில்நுட்பம், விதைச்சான்று நடைமுறை குறித்த பயிற்சி நடந்தது.
நாமக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) நடராஜன் தலைமை வகித்து பேசினார். மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார், வேளாண் துணை இயக்குனர் (மத்திய திட்டம்) முரளிதரன் ஆகியோர் பேசினர்.
கூட்டத்தில், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், தரமான விதை உற்பத்தி செய்வது, அதற்கு அரசு அளிக்கும் முக்கியத்துவம், விதைச்சான்றளிப்பு, விதை வகைகள், விதை சட்ட அமலாக்கம் குறித்து விளக்கிப் கூறப்பட்டது.
விதைச் சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், வேளாண் அலுவலர் ராமச்சந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## துவரை மகசூல் அதிகரிக்க மாற்று முறை சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: பாலக்கோடு தாலுகா முனியப்பன் கோவில் கொட்டாய் பகுதியில், துவரையில் மாற்று முறை சாகுபடி குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர்.
கோவை வேளாண் பல்கலையில், இளங்கலை வேளாண்மை பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண்மை அனுபவ திட்டத்தின் கீழ் பாலக்கோடு தாலுகா பகுதியில் தங்கிருந்து பல்வேறு களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாலக்கோடு அடுத்த முனியப்பன் கோவில் கொட்டாய் கிராமத்தில், துவரை நடவு முறை தொழில் நுட்பம் குறித்து விளக்கினர். அட்மா திட்டதின் கீழ் அமைக்கப்பட்டிருந்த துவரை பாலித்தீன் பை நாற்றங்கால் நடவு நடந்தது.

நடவு முறை துவரை சாகுபடியால் ஏற்படும் நன்மைகள், பருவமழை தாமதமானலும், அதற்கேற்றவாறு குறுடத்த பருவத்தில் நடவு செய்ய இயலும். நடவு வயிலில் பயிரின் காலம், 25 முதல் 35 நாட்கள் குறைக்கப்படுகிறது. அதிக ஆழத்தில் நடவு செய்யப்படுவதால், வேர் வளர்ச்சி அதிகரித்து, பயிர் வறட்சியை தாங்கி வளரும்.

வரிசை நடவு முறை செய்தல், பயிர் பாதுகாப்பு முறைகள், நடவு செய்த 20 முதல் 30 நாட்களில், ஐந்து முதல் ஆறு செ.மீ., அளவுக்கு நுனிக்குறுத்து கிள்ளி விடுதல், பக்க கிளைகளை அதிகரித்து விளைச்சல் கூடுகிறது, என்பது குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர்.

பூப்பிடிக்க துவங்கியதும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பயறு ஒண்டர் தெளிப்பதால், பூ உதிர்வது தடுக்கப்படுவதோடு, காய்களின் எண்ணிக்கை கூடுகிறது. நேரடி விதைப்பின் மூலம் கிடைக்கும் மகூலை விட இந்த முறையில், 30 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கும், என மாணவர்கள் தெரிவித்தனர்.

வேளாண்துறை அட்மா திட்ட அலுவலர்கள் தேவி, கலையரசி, கோபிநாத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**உரங்கள் கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை: வேளாண் துறை எச்சரிக்கை** பதிவு

செய்த நாள் : ஜூலை 22,2012,03:59 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உரங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன் எச்சரித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியுள்ளது. எனவே இந்த பருவ மழைக்கு ஏற்ப தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் போதிய அளவு உரங்கள் விற்பனைக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.உர விற்பனையாளர்கள் தங்கள் உரிமத்தில் அனுமதி பெற்ற முகவரியில் மட்டுமே உரங்கள் விற்பனை மற்றும் இருப்பு வைக்க வேண்டும். அனைத்து சில்லறை மற்றும் மொத்த உர விற்பனையாளர்கள் உரம் இருப்பு மற்றும் விற்பனை விலை குறித்த தகவல் பலகை தவராமல் வைக்க வேண்டும்.

பட்டியல்படி பெறப்பட்ட உரங்களின் விற்பனை விலையினை இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ய

வேண்டும். அனைத்து சில்லரை மற்றும் மொத்த உர விற்பனையாளர்கள் சில்லரை விற்பனை நிலையத்துக்கும், மொத்த விற்பனை நிலையத்துக்கும் தனித்தனியாக இருப்பு பதிவேடு மற்றும் பில் புத்தகம் பராமரிக்க வேண்டும்.சில்லரை உரவிற்பனையாளர்கள், விவசாயிகள் உரங்களை வாங்கும் போது கண்டிப்பாக ரசீது வழங்கி விவசாயிகளிடம் ரசீதில் கையொப்பம் பெற வேண்டும். விவசாயிகள், 50 கிலோவுக்கு குறைவாக அதாவது 10 கிலோ அல்லது 20 கிலோ என்ற அளவில் வாங்கினாலும் அவர்களுக்கு கண்டிப்பாக ரசீது வழங்க வேண்டும்.உரங்களை விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த விலைக்கு மிகாமல் விற்பனை செய்ய வேண்டும். கூடுதல் விலைக்கு விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## யானையால் பேரிக்காய் அறுவடை பணி அட்வான்ஸ்

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2012,00:45 IST

குன்னூர்:உலிக்கல் கிராமத்தில் தஞ்சமடைந்துள்ள யானைகளுக்கு பயந்து, அங்கு விளைந்துள்ள பேரிக்காய்களை, முன்னதாகவே அறுவடை செய்து வருகின்றனர்.
குன்னூர்-மேட்டுப்பாளையம் மலைப்பாதையை ஒட்டியுள்ள வனப்பகுதிகளில், தற்போது பலா பழ சீசன் துவங்கியுள்ளது. இவற்றை உண்ண வருவதால், மலைப்பாதையில் யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.குன்னூர் அருகேயுள்ள கே.என்.ஆர்., பகுதியில், கடந்த ஒரு மாதமாக குட்டிகளுடன் ஒரு யானை கூட்டம் முகாமிட்டுள்ளது.

இவை காட்டேரி அரசு பழப்பண்ணை, டான்டீ குடியிருப்புகள் மற்றும் அங்குள்ள தேயிலை தோட்டங்களில், வலம் வருவதால் தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.இந்த யானை கூட்டம், உலிக்கல் கிராமத்தை ஒட்டியுள்ள பேரிக்காய் தோட்டத்தில், தற்போது தஞ்சமடைந்துள்ளன. இங்கு, 15 ஏக்கர் நிலப்பரப்பில் பேரிக்காய் தோட்டம் உள்ளது. இங்கு விளையும் வால் பேரி மற்றும் சட்டி பேரிகள், மைசூர் உட்பட பல பகுதிகளுக்கு அனுப்பப்படும். பேரிக்காய் மரங்களை, யானைகள் உடைத்து சேதப்படுத்தி வருகின்றன. அவற்றுக்கு பயந்து பேரிக்காய்களை, முன்னதாகவே விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர்.

## மிக நீண்ட இலை பருத்தி சாகுபடியால் அதிக லாபம்: கலெக்டர் "அட்வைஸ்'

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2012,00:32 IST

பெரம்பலூர்: ""மிக நீண்ட இலை பருத்தி சாகுபடி செய்தால் விவசாயிகள் அதிக லாபம் அடையலாம்," என்று பெரம்பலூர் கலெக்டர் பேசினார்.

மிக நீண்ட இலை பருத்தி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கம் வேப்பந்தட்டை பருத்திஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. இக்கருத்தரங்கில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று, மிக நீண்ட இலை பருத்தி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் முறைபற்றி விவசாயிகளுக்கு விளக்கினர். கருத்தரங்கில் கலெக்டர் தரேஷ்அஹமது பேசியதாவது:

இந்திய அளவில் மிக நீண்ட இலை பருத்தி 15 லட்சம் பேல் தேவைப்படுகிறது. தற்போது ஐந்து லட்சம் பேல் தான் மகசூல் செய்யப்படுகிறது. மிக நீண்ட இலை பருத்தியின் தேவை சந்தை அளவில் அதிக அளவு தேவை இருப்பதால், விவசாயிகள் மிக நீண்ட இலை பருத்தி சாகுபடி செய்தால் அதிக லாபம் அடையலாம்.

தேவைக்கேற்ப மிக நீண்ட இலை பருத்தியை உற்பத்தி செய்தால் பருத்தி தொழிற்சாலையே நேரடியாக வந்து கொள்முதல் செய்வார்கள். இதன் மூலம் உங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 12 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் முக்கிய பங்கினை வகிக்கின்றன. மாவட்டத்தில் மொத்தம் உள்ள விவசாயிகளில் பெரும்பாலான விவசாயிகள் பருத்தி மற்றும் மக்காச்சோளம் பயிரினை பயிரிட்டு வருகின்றனர். இந்த பயிர்களின் மூலம் தற்போது விவசாயிகளுக்கு கிடைத்து வரும் வருமானத்தினை பெருக்கவும், புதிய தொழில்நுட்ப உத்திகள் குறித்தும், உயர் விளைச்சல் தரவல்ல புதிய பயிர் ரகங்கள் குறித்து விளக்கம் அளிக்க வந்துள்ள கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு தரும் கருத்தினை பெற்று பயனடையுமாறு கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

கருத்தரங்கில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை ஆராய்ச்சியாளர்கள் குணசேகரன், கணேசன், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் கவிமணி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் பன்னீர்செல்வம், தோட்டக்கலை துணை இயக்குனர் சௌந்திரராஜன் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## விளைச்சல் அதிகரிப்பால் புடலங்காய் விலை சரிவு

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2012,00:11 IST

உத்தமபாளையம் : விளைச்சல், வரத்து அதிகரித்துள்ளதால் புடலங்காய் விலை சரிவடைந்து, கிலோ 5 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

கம்பம் பள்ளத்தாக்கில் த்தமபாளையம், ராயப்பன்பட்டி, காமயகவுண்டன்பட்டி, சின்னமனூர், ஓடைப்பட்டி, சுருளிப்பட்டி, சீலையம்பட்டி ள்ளிட்ட பல ஊர்களில் பரவலாக புடலங்காய் சாகுபடி

செய்யப்படுகிறது.
திராட்சை தோட்டங்களில் புதிய கொடி அமைக்கும் போதும், சீசன் முடிந்த இடைவெளிகளின் போதும், அதில் புடலை சாகுபடி செய்கின்றனர். மற்ற காய்களை விட விலை குறைவாக இருப்பதால், இதன் பயன்பாடும் அதிகம்.
ஆண்டு முழுவதும் விளைச்சல் கிடைப்பதால்,வரத்து எப்போதும் சீராக இருக்கும்.ஆறு மாதங்களுக்கு முன் கிலோ 8 முதல் 10 ரூபாய் வரை விற்பனையானது. மே,ஜூன் மாதங்களில், வெயில் காரணமாக புடலை கொடிகள் கருகின. நோய் தாக்குதலுக்கும் ள்ளானது.
இதனால் கிலோ 17 வரை விற்பனையானது. கடந்த ஒருமாதமாக அதிக வெயிலும் இல்லாமல், மழையும் பெய்யாததால் விளைச்சலுக்கு தகுந்த காலநிலை நிலவியது. இதனால் விளைச்சல் அதிகரித்து சந்தைக்கு வரத்து கூடியதால், கிலோ ரூ. 5 க்கு விற்பனையாகிறது.

**தண்ணீர் இல்லாமல் வாடும் நெற் பயிர்கள் குற்றாலம் காடுவெட்டி விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2012,03:29 IST

திருநெல்வேலி : தண்ணீர் இல்லாமல் நெற் பயிர்கள் வாடி வருவதாக குற்றாலம் காடுவெட்டி விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.
நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கு நாள் கூட்டம் நடந்தது. இதில் குற்றாலம் காடுவெட்டி புரவு நன்செய் விவசாயிகள் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:
எங்கள் பகுதி விவசாய நிலங்களுக்கு அடிபட்டான்பாறை மறவன் தம்பிரான் கால் பிரிவு பகுதியில் சரியான அளவில் நீர் செல்லும் வகையில் கான்கீரிட் மட்டம் அமைக்கப்பட்டு வெகு நாட்களாக பயன்படுத்தி வருகிறோம்.
தற்போது நீர் வரத்து குறைவாக இருப்பதால் சிலர் எங்கள் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் வராத அளவுக்கு திருப்பி விட்டுள்ளனர். இதனால் எங்கள் பகுதியில் நெற் பயிர் நீரின்றி வாடி வருகிறது. எனவே, இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினகரன்

# வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை சரிவு

பதிவு செய்த நேரம்:2012-07-23 12:03:49

பழநி, : பழநி பகுதியில் கடந்த சில நாட்களாக அனைத்து காய்களின் விலையும் ஏறுமுகமாக இருந்தது. தற்போது முகூர்த்த சீசன் கிடையாது. வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால், காய்கறிகள் விலை குறையத்துவங்கியுள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ.50க்கு விற்ற சின்ன வெங்காயம் ரூ.38க்கு விற்கப்படுகிறது. ரூ.70க்கு விற்கப்பட்ட பச்சைமிளகாய், ரூ.36க்கு விற்கப்படுகிறது.

மற்ற காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:

| | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| தக்காளி | 30 | 18 |
| காரட் | 60 | 30 |
| புதினா | 80 | 50 |
| கொத்தமல்லி | 30 | 15 |
| கத்தரிக்காய் | 30 | 10 |
| பட்டர்பீன்ஸ் | 200 | 40 |
| சோயாபீன்ஸ் | 150 | 40 |
| பீட்ரூட் | 36 | 23 |